(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

கனம் திரு வெ. ராமைய்யா : (அ) தற்போதைக்கில்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

10-00 a.m.

கோவை நகரில் தண்ணீர் பற்றுக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகள்

* 416 **கேள்வி.— திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை நகர குடி தண்ணீர் பற்றுக்குறையைப் போக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) இக்கேள்விக்குரிய **பதில்** * சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

UNSTARRED QUESTIONS.

குளச்சலில் மருத்துவ மனை கட்டிடம்

62 **கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் கட்ட இருக்கும் மருத்துவ நிலையத்தின கட்டிட வேலே தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) இம்மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் அரசாங்க ஆஸ்பத்திரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ?

பதில்.—(அ) குளச்சலில் உள்ள அரசாங்க மருந்தகத்தை தாலுகா தலைமையிட மருத்துவ மனையாக உயர்த்துவதற்காக கட்டிடங்கள் கட்டும் திட்டத்திற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லே.

(இ) இல்லே.

(*a*) The scheme for the construction of buildings for converting the Government Dispensary, Colachel, into a taluk headquarters hospital has not yet been sanctioned.

(*b*) No.

குடியிருப்பு மனைகளுக்கு மனுக்கள்

63 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1962-63, 1963-64, 1964-65 ஆண்டுகளில் குடியிருப்பு மனைகள் கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(இ) அவைகளுள் பைசல் செய்யப்பட்டு மனைகள் வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

(உ) பைசலாகாமல் உள்ள மனுக்கள் எத்தனை ?

பதில்.—

	1962-63.	1963-64.	1964-65.
(அ)	555	534	377
(இ)	177	169	78
(உ)	378	365	299

* 813-ம் பக்கத்தில் II-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.